## தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவகம் - 2017

தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1981 இன் 55 ஆம் இலக்க தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 36(4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை நிறுவனத்தின் பணிப்பாளருக்கு 2018 மே 01 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெலலையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 79 ஆம் பந்தி பிரகாரம், நடைமுறையல்லாத சொத்துகளிற்காக பயனுள்ள ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்படாததனால் கிரயம் ரூபா 75,914,655 ஆன நடைமுறையல்லாத சொத்துகள் பூரணமாக தேய்விடப்பட்ட போதும், தொடர்ந்தும் பாவனையில் நிலவியது. அதன் படியான மதிப்பீட்டு குறைகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 பிரகாரம் மீள் மதிப்பீட்டிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2017 மே 2 ஆம் திகதி ரூபா 623,358 யிற்கு கொள்வனவு செய்யப்பட்ட இரசாயனகூட உபகரணத்திற்காக ஆண்டிற்குறிய பெறுமானத் தேய்வு ரூபா 41,500 ஆன போதும், ரூபா 456,503 என கணக்கு வைத்ததன் காரணமாக ரூபா 415,003 கூடுதலாக தேய்விடப்பட்டிருந்தது.

#### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 6,306,493 பெறுமதியான வழங்கள் மற்றும் சேவைகளிற்காக செலுத்த வேண்டிய மீதி தொடர்பாக மீதி உறுதிப்படுத்தல் மற்றும் பெறுமதி ரூபா 24,915,351 ஆன நடைமுறை சொத்தின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த இரசாயனகூட உபகரணங்கள், உதிரிபாகங்கள் மற்றும் தளபாடங்கள் தொடர்பாக பௌதீக இருப்பை உருதிப்படுத்த சட்டபூர்வ சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2013 மார்ச் 18 ஆம் திகதி இரசாயன பொருட்கள் நிறுவனத்திற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு செலுத்தப்பட்ட ரூபா 55,863 ஆன முற்பணம் வழங்கப்பட்டு ஐந்து வருடங்களிற்கு அதிக காலம் கடந்திருந்த போதும், குறித்த பொருட்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்ப்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 ஜூன் 02 திகதிய இலக்கம் பீஈடீ/12 பொது முயற்சிகள் சுற்று நிருபத்தின் 8.2.2 ஆம் பிரிவு - | அனைத்து மேலதிக பணங்கள், நிதி அமைச்சரின் முன்கூட்டிய அனுமதியின் பிரகாரம் நிலையான வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள் குறுங்கால வைப்புக்கள் அல்லது வேறு பயனுள்ள முதலீட்டில் ஈடுபடுத்த வேண்டிய போதும், மீளாய்வாண்டில் நிறுவனத்தினால் முதலீடு செய்யப்பட்ட ரூபா 6,000,000 யிற்காக முகாமை சபையின் அனுமதி மாத்திரம் பெறப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை - | |
| | நிதிப் பிரமாணம் 101 | காணாமல் போனதென இணங்காணப்பட்ட ரூபா 1,212,717 பெறுமதியான 71 அலுவலக மற்றும் இரசாயன உபகரணங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2009 நவம்பர் 13 ஆம் திகதிய 438 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | 2015 ஆம் ஆண்டின் போது பாவனையிலிருந்து அகற்றப்பட்ட ரூபா 4,869,102 பெறுமதியான 324 பொருட்கள் தொடர்பாக சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கை | நிதி கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 857,381,928 ஆன நிலையான சொத்துகளுக்கான நிலையான சொத்து பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை |

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 73,960,282 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 43,774,796 ஆனதால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 30,185,486 வீழ்ச்சியொன்றைக் காண்பித்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக பராமரிப்பு மற்றும் ஒப்பந்தச்சேவைகளுக்கான செலவினம் ரூபா 5,533,621 ஆல் மற்றும் பெறுமானத் தேய்வு ரூபா 27,917,592 ஆல் அதிகரித்தமை இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையிலும் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வினை மீண்டும் செம்மையாக்குகையில் 2013 ஆம் ஆண்டின் ரூபா 83,417,267 ஆன நிறுவகத்தின் பங்களிப்பு 2017 ஆண்டின் போது ரூபா 124,020,032 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஜுன் 02 திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 பந்தியின் பிரகாரம், 03 வருடங்களுக்கு குறைவற்ற காலத்திற்கான கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு, அத் திட்டத்தை வருடாந்தம் நாளாதுவரையாக்கப்பட்டு முகாமைத்துவ குழுவின் அனுமதியை பெற்றுக் கொண்டு, ஒவ்வொரு வருடமும் ஆரம்பிப்பதற்கு குறைந்தபட்சம் 15 நாட்களிற்கு முன்பு கணக்காய்வாளர் நாயகம், திறைசேரி, அமைச்சு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நிறுவனம் கூட்டிணைந்த திட்டமொன்றை தயாரித்து சமரப்பித்திருக்கவில்லை.

(ஆ) திறைசேரி செயளாலரின் 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம், நிறுவனத்தின் மொத்த இலக்கை அடைந்து கொள்வது தொடர்பாக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் நிறுவனத்தின் பெறுனர் நடவடிக்கைகள் மட்டுமே உள்ளடக்கப்பட்டிருந்தது.

#### 4.1.2 நடவடிக்கை மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் விஞ்ஞான ஆராய்ச்சிகளின் மூலம் 04 புதிய கண்டுபிடிப்புகளிற்காக பேட்ரன் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள இலக்கு வைக்கப்பட்ட போதும், ஒரு அனுமதிப்பத்திரத்திற்கு மாத்திரமே விணணப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் ஆராய்ச்சிகளில் ஈடுப்பட்டுள்ள ஆளணியின் 19 விஞ்ஞானிகளிற்கு மத்தியில், 06 விஞ்ஞானிகளுக்கு ஆண்டினுள் ரூபா 14,578,967 ஆன பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்ட போதும் ஆராய்ச்சி நடவடிக்கைகளின் முன்னேற்றம் அறிக்கையிடப்பட வில்லை.

(இ) கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட மீளாய்வாண்டின் 10 ஆராய்ச்சி மீளாய்வு சபை கூட்ட அறிக்கைகளின் படி விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி முன்னேற்றம் பற்றிய மீளாய்வு செய்யப்பட வில்லை.

(ஈ) நிறுவகம் ஆரம்பிக்கப்பட்டு 30 ஆண்டுகளை கடந்திருந்த போதும், ஆராய்ச்சி கருத்திட்ட மதிப்பீட்டிற்காக பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2017 ஜுன் 28 ஆம் திகதி கூடிய நிறுவகத்தின் ஆராய்ச்சி கவுன்சில் மூலம் வருடாந்த ஆராய்ச்சி கருத்திட்டங்களை மதிப்பிடும் செயல்முறைகளை நிர்னயிப்பதற்கான தீர்மானமொன்று எடுக்கப்பட்ட போதும், கணக்காய்வு திகதியான 2018 ஜனவரி 16 ஆம் திகதி வரை அவ்வாறான முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ஆராய்ச்சி ஆளணி அங்கத்தவர்களுக்கு குறித்த ஆராய்ச்சி நடவடிக்கைகள் பொதுவாக வழங்கப்பட்டிருந்ததுடன், அதனை செயலாற்றுகை திட்டத்திற்கு உட்படுத்த அல்லது கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 பெப்ரவரி 16 ஆம் திகதி ரூபா 2,000,000 இற்கு மீள்மதிப்பிடு செய்யப்பட்ட 2 கெப் வண்டிகள் ஓராண்டிற்கும் அதிக காலமாக பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டிருந்தன. அதனை பழுதுபார்த்து பாவனையில் ஈடுப்படுத்த அல்லது பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளிநாட்டு நிறுவனங்களிற்கு நூலக புத்தகங்கள், ஆய்வு கூட பொருட்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவிற்கு 1998 ஆண்டிற்கு முன்னர் 04 சந்தர்பங்களில் வழங்கப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 57,918 முற்பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்காது, கட்டுப்பாட்டு சபையின் அனுமதியுடன் மீளாய்வாண்டில் ஏடுகளிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

நிறுவகத்தின் சிற்றுண்டிச்சாலை நடாத்தும் சேவையை வழங்கியிருந்த ஒப்பந்தக்காரருடன் நிருவகம் 2017 பெப்ரவரி 08 ஆம் திகதி கைதச்சாத்திட்ட உடன்படிக்கையின் 17 ஆம் பந்தியினூடாக குறித்த ஒப்பந்தக்காரர், நிறுவக உபகரணங்களிற்காக ரூபா 100,000 ஆன காப்புறுதிக் காப்பொன்றை வழங்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும், ஒப்பந்தக்காரரினால் குறித்த காப்புறுதிக் காப்பு வழங்கப்படடிருக்கவில்லை.

## 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

நிறுவனத்திற்கு சொந்தமான 34.5 ஏக்கர் காணிப் பரப்பை கொண்ட தபுள்ளயில் அமைந்துள்ள ‘ருக் உயன’ யின் முகாமை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை 20 ஆண்டுகளுக்கு தனியார் அமைப்பொன்றிற்கு 2005 ஆண்டு ஒப்படைக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையுடன் தொடர்பான நிபந்தனைகளை மீறுவதாக 2017 மே 25 திகதிய உள்ளக கணக்காய்வின் போது புலனான போதும், கணக்காய்வுத்திகதியான 2018 ஜனவரி 26 திகதி வரை இது தொடர்பில் முறையான நடவடிக்கை எடுக்காது 2017 ஆண்டினுள் ரூபா 300,000 ஆன தொகையை குறித்த அமைப்பிற்கு செலுத்தியிருந்தது.

## 4.5 நிதி குறைபயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் அரச மூலதன உதவியாக நிறுவகத்திற்கு கிடைத்த ரூபா 68,978,379 ஆன பணத்திலிருந்து ரூபா 48,507,290 அதாவது ஒதுக்கீட்டின் 70 சதவீதம் பாவிக்கப்பட்டிருக்கவில்லை. முன்னைய ஆண்டின் ஒதுக்கீட்டுத்தொகையின் 26 சதவீத பணமும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தின் ஒவ்வொரு மாத முடிவிலும் ரூபா 88 மில்லியனிற்கும் ரூபா 154 மில்லியனிற்கும் இடைப்பட்ட பண மீதி பராமரிக்கப்பட்ட போதும் அத்தொகை நிறுவகத்தின் குறிக்கோளை அடையும் வகையில் அல்லது பயனுள்ள முதலீட்டில் ஈடுபடுத்தவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் கூட்டுத்தொகை ரூபா 14,053,353 ஆன 03 உபகரணங்கள் குறித்த அளவுத்திட்டத்திற்கு இணங்காமையினால் நிறுவனத்தினால் நிராகரிக்கப்பட வேண்டி ஏற்பட்டதனால் தீர்வை வரி மற்றும் விடுவித்தல் கட்டணமாக செலுத்திய ரூபா 1,628,987 தொகை நிறுவனத்திற்கு இழப்பானது.

(ஆ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம் மற்றும் 2001 ஆகஸ்ட் 24 திகதிய பிர/ஆயதன/11 ஆம் இலக்கம் கொண்ட தொழில் ஆணையாளரின் கடிதம் பிரகாரம், கற்கை படி வாழ்கை செலவு படியாக வரைவிலக்கனப்படுத்தப்படாததனால், இப்படிகள் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் தொழில் வழங்குனர் நிதிய பங்களிப்பிற்கும் தொடர்புபடுத்திக்கொள்ளக் கூடாது, எனினும் அவ் ஏற்பாடுகளுக்கு மாற்றமாக 2013 ஜனவரி 08 திகதிய இலக்கம் 1000 கொண்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றுநிருப ஆலோசனைகளின் பிரகாரம் கொடுப்பனவு செய்த கற்கை படிகளின் அடிப்படையில் கல்வி ஆளணிக்காக மேல் குறிப்பிட்ட நிதியங்களிற்கு நிறுவன பங்களிப்பு ரூபா 2,752,659 விஞ்சி செலுத்தப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுகளின் இது குறித்து சுட்டிக்காட்டப்பட்ட போதும் அதனை சீர் செய்ய நடவடிக்கை எடுக்காது தொடர்ந்தும் நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது.

## 4.7 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்வு திகதியான 2018 ஜனவரி 16 அன்று 04 நிறுவன ஆளணிப் பதவிகளில் 28 வெற்றிடங்கள் நிலவின. ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக நிருவப்பட்ட ஓர் நிறுவனத்தின் ஆராய்ச்சி ஆளணியில் 50 சதவீதத்திற்கு அன்மித்த அளவு வெற்றிடமாகக் காணப்படுவது அவதானிக்கப்பட்டதுடன், அது நிருவன அடிப்படை இலக்கை அடைந்து கொள்வதற்குத் தடையாக நிலவுவதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) பிரதிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) பதவிக்காக 03 ஆண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆளணியை நியமிக்க டீஎம்எஸ்/1608 மற்றும் 2014 மே 29 திகதிய முகாமை சேவை பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டிருந்த போதும், அதன் 03 ஆம் பந்தி பிரகாரம் ஆளணியை சேர்த்துக்கொள்ள ஆளணி நியமனத்திட்டம் தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டிற்கான சிற்றுண்டிச்சாலை சேவையை வழங்க கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தில் நிறுவகத்தின் நீர் குழாய் ஒட்டுதலிற்காக ஓர் நபரை வழங்க வேண்டுமெனவும் அதற்காக மாதாந்தம் ரூபா 25,000 செலுத்தப்படும் எனவும் நிபந்தனையொன்று உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேவைக்கு ஏற்ப பொறுத்தமான சேவை வழங்குனர் ஒருவரை குறைந்த கிரயத்தில் பெற்றுக்கொள்ள திட்டமிடாது ரூபா 300,000 ஆன பணம் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

## 5. நிலையான அபிவிருத்தி

### 5.1 நிலையான அபிவிருத்தி நோக்கினை அடைந்து கொள்ளல்

2017 ஆகஸ்ட் 14 திகதிய இலக்கம் NP/SP/SDG/17 கொண்ட தேசிய கொள்கைகள் மற்றும் பொறுலாதார நடவடிக்கை அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு ''நிகழ்ச்சிநிரல்'' பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதுடன், மீளாய்வாண்டு தொடர்பாக தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவகம் நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்காண்பதற்கு/இஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 6 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகை மற்றும் ஒப்பந்த நடைமுறை

#### 6.1.1 பெறுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகை நடைமுறை வழிகாட்டி கோவையின் 4.2 பந்தி பிரகாரம் நிறுவகத்தினால் பிரதான பெறுகை நடைமுறை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன், மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பெறுகை நடைமுறை திட்டம், கைநூலின் 4.2.1 பந்தியின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட மாதிரியின் பிரகாரம் பெறுகை நடைமுறைகளுக்கான கால எல்லை உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் ரூபா 25,870,610 ஆன 05 ஒப்பந்த சேவைகள் மற்றும் ரூபா 20,308,138 ஆன 05 நிர்மான கருத்திட்டங்களுக்கான பெறுனர் நடைமுறைகள் பெறுனர் திட்டத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவகத்திற்கு கணனித்தொகுதியொன்று அபிவிருத்தி செய்வதற்காக தனியார் நிறுவகம் ஒனறுடன் ரூபா 2,200,000 பணத்திற்கு 2016 மார்ச் 28 திகதி ஒர் ஒப்பந்தம் கைசாதிடப்பட்டிருந்தது. அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பெறுனர் நடைமுறை வழிகாட்டியின் 9.7 பந்தி பிரகாரம், தகவல் தொகுதிகள் பெறுனர் நடைமுறைகளுக்குட்படுத்துகையில் பொது நிதித் திணைக்களத்தினால் பெற்றுக்கொண்ட விஷேட மனுக்கோரல் பதிவேடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) நிர்மான ஆரம்ப பணிகளுக்கான முற்பனமாக 2016 மார்ச் 28 திகதி ரூபா 660,000 செலுத்தப்பட்ட போதிலும், பெறுனர் நடைமுறை வழிகாட்டியின் 5.4.4 பந்தி பிரகாரம் முற்பணக் காப்பொன்று பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) ஒப்பந்தம் பிரகாரம் 2016 திசெம்பர் 27 திகதியன்று குறித்த பணிகளை பூர்த்தி செய்திருக்க வேண்டிய போதும், 2018 பெப்ரவரி வரையிலும் அப்பணி பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. ஆனாலும் ஒப்பந்தத்தின் 25 ஆம் பந்தி பிரகாரம், தாமதக் கட்னமாக அறவிட வேண்டிய ரூபா 220,000 ஆன பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பெறுனர் வழிகாட்டி கோவையின் 6.3.1 (அ) பந்தியின் பிரகாரம், நிறுவகத்தின் ஒப்பந்த சேவைகள் பெறுகையின் போது, பதிவு தபால் மூலம் மனு சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்படாமை காரணமாக, தகைமை பெற்ற ஆர்வமுள்ள தரப்பினர்களுக்கு பெறுகையிற்கு பங்குப்பற்ற நியாயமான, சமமான மற்றும் உச்ச சந்தர்பம் வழங்கல் எனும் நோக்கங்களிற்கு மாற்றமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டில் பெறுகை திட்டம் மூலம் எதிர்பார்ககப்பட்ட கருத்திட்ட திட்டமிடலின் பிரகாரம் செயற்படாமை காரணமாக 03 கருத்திட்டங்கள் ஆறு மாதங்கள் முதல் 11 மாதங்கள் வரையான காலம் தாமதித்து வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்த பெறுகை திட்டம் யதார்தமற்றது எனவும், அது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 6.1.2 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்

நிர்மான மதிப்பீடு தயாரிக்கும் போது கட்டிட திணைக்களத்தினால் அல்லது அதற்கு இணங்க மத்திய மாகாண சபையினால் அனுமதிக்கப்பட்ட விலைகளை அடிப்படையாக் கொள்ள வேண்டிய போதிலும், நிறுவகம் ரூபா 18,306,400 ஆன நிர்மான மதிப்பீடுகளை அதற்கு இணங்க தயாரித்திருக்க்வில்லை. எவ்வாராயினும் மதிப்பீடு அடிப்படையில் பொறியியளாலருக்கு ரூபா 619,799 மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்தது.

### 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களுடன் ஒப்பீடு செய்த போது 06 விடயங்களில் 49 சதவீதத்திலிருந்து 12,541 சதவீதமான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்னடுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பலவீனங்கள் அவ்வப்போது நிறுவக பணிப்பாளர் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | சில இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றாமை. |
| (ஆ) | திட்டமிடல் | நிறுவனத்தின் நோக்கங்களை அடையும் வகையில் ஆராய்ச்சி நடவடிக்கைகளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தாமை. |
| (இ) | களஞ்சிய கட்டுப்பாடு | மெதுவாக அசையும் இருப்புக்கள் மற்றும் செயலற்ற இருப்புக்கள் தொடர்பாக நிதிபிரமாணங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை. |